# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

## பிரிவு 5 (2015 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 10)

### விவிலிய வினாவிடைப் போட்டி

1. விவிலியத்தில் எத்தனை நூல்கள் உண்டு? **73**
2. பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **46**
3. புதிய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை? **27**
4. விவிலியத்தின் முதல் நூலும் கடைசி நூலும் யாவை? **தொடக்க நூல், திருவெளிப்பாடு**
5. கடவுள் முதல் நாளில் எதை படைத்தார்? **ஒளி**
6. கடவுள் ஆபிரகாமிற்கு வழங்குவதாக கட்டளையிட்ட நாடு எது? **கானான்**
7. எபிரேயரின் மருத்துவப் பெண்கள் யாவர்? **சிப்ரா, பூவா**
8. மோசே பார்வோனிடமிருந்து தப்பி எந்த நாட்டில் குடியேறினார்? **மிதியான்**
9. மோசேயின் புதல்வர்கள் பெயர் என்ன ? **கேர்சோம், எலியேசர்**
10. மோசேயின் பெற்றோர் எக்குலத்தைச் சார்ந்தவர்கள்? **லேவியர்**
11. எகிப்தியருக்கு எதிராக கடவுள் எத்தனை பெரும்துன்பங்களை அனுப்பினார்? **10**
12. பாலைநிலத்தில் நடந்துவந்த இஸ்ரேயல் மக்களுக்கு கடவுள் வழங்கிய உணவு யாது? **மன்னா, காடை**
13. இயேசுவின் தாயின் பெயர் என்ன? **மரியா**
14. இயேசுவின் வளர்ப்புத்தந்தையின் பெயர் என்ன? **புனித யோசேப்பு**
15. இயேசு பிறந்தவுடன் அவரை வணங்க முதலில் சென்றவர்கள் யார்? **இடையர்கள்**
16. இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக்க சென்ற போது அங்கு இருந்த பெண் இறைவாக்கினர் யார்? **அன்னா**
17. இயேசு எங்கே திருமுழுக்கு பெற்றார்? **யோர்தான் நதிக்கரையில்**
18. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
19. திருமுழுக்கு யோவானின் உணவு என்ன? **வெட்டுக்கிளியும், காட்டுத் தேனும்**
20. ‘‘ அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்கு தகுதியில்லை’’ என்று கூறியவர் யார்? **திருமுழுக்கு யோவான்**
21. இயேசு யார் இறந்த போது கண்ணீர் விட்டு அழுதார்? **இலாசர்**
22. இயேசுவின் நண்பன் இலாசர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? **பெத்தானியா**
23. இயேசுவின் நண்பன் இலாசரின் சகோதரிகள் யார்? **மார்த்தா, மரியா**
24. இயேசுவின் முதல் சீடர் யார்? **புனித பேதுரு**
25. முதல் சீடரை இயேசு எங்கே அழைத்தார்? **கலிலேய கடற்கரை ஓரம்**
26. பேதுருவின் தந்தை பெயர் என்ன? **யோனா**
27. இயேசு தோற்றம் மாறிய போது அவருடன் உரையாடியவர்கள் யாவர்? **எலியா, மோசே**
28. கடவுளின் கட்டளைகள் எத்தனை? **10**
29. அருளடையாளங்கள் எத்தனை? **7**
30. புதுமுக அருளடையாளம் எது? **திருமுழுக்கு**
31. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார்? **40ம் நாள்**
32. எம்மாவு சீடர்கள் எத்தனை பேர்? **2**
33. பாஸ்கா விழாவிற்காக இயேசு எருசலேமுக்கு நுழைகையில் எதன் மேல் ஏறி பவனி வந்தார்?**கழுதைக் குட்டி**
34. கடவுள் இரக்கமுள்ளவர். பாவங்களை மன்னிக்கின்றார் என்பதை எடுத்துக்கூறும் உவமை எது? **ஊதாரி மைந்தன் உவமை**
35. புனித வியாழன் அன்று இயேசு உருவாக்கிய இரண்டு திருவருட்சாதனங்கள் யாது? **தேவநற்கருணை, குருத்துவம்**
36. திருச்சபையின் கட்டளைகள் எத்தனை? **6**
37. பேதுரு யேசுவை எத்தனை முறை தெரியாது என மறுதலித்தார்? **3**
38. சிறுவன் ஒருவன் 5 வாற்கோதுமை அப்பங்களும் 2 மீன்களும் வைத்திருப்பதை இயேசுவிடம் கூறிய திருத்தூதர் யார்? **அந்திரேயா**
39. ‘‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’’ என்று வாழ்த்தியவர் யார்? **இயேசு**
40. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பதினான்காம் லியோ**

**பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுத கற்றுக் கொள்ளுங்கள்**

ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப் படுத்துகின்றது, என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது (லூக்கா 1: 47)

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)
## செபமாலை

நம்முடைய செபங்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு மாலையாக நம் இறை அன்னை மூலம் இறைவனுக்கு சமர்ப்பிப்பதே செபமாலை ஆகும். கி.பி. 4ஆம் நூற்றாண்டில் பாலைவனத்தில் தங்களுடைய வாழ்க்கையை தியானத்திலும், செபத்திலும் ஊன்றியிருந்த துறவிகளே முதன் முதலில் செபமாலை பக்திக்கு அடிகோலியவர்கள். இறை இயேசுவின், இறை அன்னையின் மீது கொண்ட பக்தியின், பிரதிபலிப்பே செபமாலையாக உருவெடுத்தது. நமது இறை அன்னை 13ம் நூற்றாண்டில் புனித தோமினிக் அவர்களுக்கு அளித்த காட்சியில் செபமாலையை கொடுத்து அதனுடைய பக்தியை பரப்பச் செய்யுமாறு கேட்டுக்கொண்டதாக திரு அவையின் பாரம்பரியமும் செவி வழிச்செய்திகளும் குறிப்பிடுகின்றன. செபமாலையில் நாம் கிறிஸ்துவின் பிறப்பு, பணிவாழ்வு, பாடுகள், உயிர்ப்பு போன்ற மறை நிகழ்வுகளைத் தியானித்து செபிப்பதால் இவற்றை தேவ இரகசியங்கள் என்கிறோம்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

அகிலம் படைத்த ஆண்டவனே
அனைத்தையும் தருகின்றோம்
ஆற்றல் நிறைந்த அகிலவனே
அனைத்தையும் தருகின்றோம் (2)
தருவோம் தருவோம் தந்து கொண்டிருப்போம்
இதயத்தின் துடிப்பு இருக்கும் வரை (2)

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்
விளைச்சலைத் தருகின்றோம்
பாலை போன்ற எங்கள் மனதின் வறட்சியைத் தருகின்றோம் (2)
நிறைவாய்க் கொடுத்தால் நிறைவாய்க் கிடைக்கும்
என்பதை நம்புகிறோம் (2)